Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No. 69/2024

2026-ம் ஆண்டு **ஜீலை** மாதம் 27-**ம்** தேதி **திங்கள்கிழமை** குற்றம் முறையிடுபவரின் **அ.சா. 1-வது** நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. M. சதீஷ்குமார், Bench Clerk Grade III அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 1 | தொழில் | - | விவசாயம் |
| பெயர். | - | கிருஷ்ணமூர்த்தி | வட்டம் | - | திருவெண்ணெய்நல்லூர் |
| த/பெ. | | ஜெயராமன் | சமயம் | - | - |
| கிராமம் | - | மேலமங்கலம் | வயது | - | 60 |

27.07.2026

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

1. நான் தற்போது மேலமங்கலம் கிராமத்தில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். இந்த விபத்தில் இறந்துபோன ஜெயபாலன் எனது அக்காவின் கணவர். கடந்த 2021ம் வருடம் 7 ம் மாதத்தில் ஒருநாள் இரவு சுமார் 8.30 மணியளவில் நான் எனது வீட்டில் இருந்தபோது எனது கைபேசி எண்ணிற்கு சீனுவாசனும், சரவணனும் தொடர்பு கொண்டு ஜெயபாலன் பேரங்கியூர் பஸ்நிறுத்தம் அருகே நின்றுகொண்டிருந்தபோது அவர் மீது கார் மோதி விபத்து ஏற்பட்டுவிட்டதாகவும் ஜெயபாலனை 108 ஆம்புலன்ஸ் மூலம் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்ததாகவும் எனக்கு தகவல் சொன்னார்கள்.

2. நான் உடனே முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு சென்று ஜெயபாலனை பார்த்தேன். அவர் இறந்துவிட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தார்கள். பின்பு விபத்து நடந்த இடத்தை பார்த்தபோது வெள்ளை நிற கார் நின்றுகொண்டிருந்தது. அந்த காரை செஞ்சியை சேர்ந்த சரவணன் என்பவர்

ஓட்டியதாக அங்கிருந்தவர்கள் தெரிவித்தார்கள். அந்த காரின் பதிவு எண். 6878 ஆகும். பின்பு மறுநாள் விபத்து சம்மந்தமாக திருவெண்ணெய்நல்லூர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான். அந்த புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். **அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்பு போலீசார் ஜெயபாலின் பிரேதத்தை பிரேதவிசாரணை செய்தபோது உடனிருந்தேன். போலீசார் விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். இந்த வழக்கானது 2022 வருடத்திய வழக்கு என்று எடுத்துக்கூறியும் போதுமான வாய்ப்பு கொடுத்தும் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை.

**Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.**

Digitally signed by
SENTHILKUMAR
Date: 2026.07.27 16:07:22 +0530

**D.M-cum-JM,**
**T.V.Nallur.**

Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No. 69/2024

2026-ம் ஆண்டு **ஜீலை** மாதம் 27-**ம்** தேதி **திங்கள்கிழமை** குற்றம் முறையிடுபவரின் **அ.சா. 2-வது** நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. M. சதீஷ்குமார், Bench Clerk Grade III அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 2 | தொழில் | - | விவசாயம் |
| பெயர். | - | சரவணன் | வட்டம் | - | திருவெண்ணெய்நல்லூர் |
| த/பெ. | | ரங்கநாதன் | சமயம் | - | - |
| கிராமம் | - | செம்மார் | வயது | - | 48 |

27.07.2026

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

1. நான் தற்போது செம்மார் கிராமத்தில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 யை எனக்கு தெரியும். இந்த விபத்தில் இறந்துபோன ஜெயபாலனை தெரியும். கடந்த 2021 ம் வருடம் 7 ம் மாதத்தில் ஒருநாள் இரவு சுமார் 8.00 மணியளவில் நானும், சீனுவாசனும் பேரங்கியூர் பஸ்நிறுத்தம் அருகே நின்றுகொண்டிருந்தோம். அப்போது திருச்சியில் இருந்து சென்னை நோக்கி வந்த வெள்ளை நிற கார் ஜெயபாலன் என்பவர் மீது மோதி விபத்து ஏற்படுத்தியது. பின்பு நானும், சீனுவாசனும் உடனே காயம்பட்ட ஜெயபாலனை 108 ஆம்புலன்ஸ் மூலம் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தோம். பின்பு விபத்து குறித்து கிருஷ்ணமூர்த்திக்கு போன் மூலம் தகவல் தெரிவித்தேன்.

2. விபத்தை ஏற்படுத்திய காரின் பதிவெண் 7898 ஆகும். அந்த காரை ஆஜர் எதிரிதான் ஓட்டினார். பின்பு விபத்தை குறித்து மறுநாள் அ.சா.1 திருவெண்ணெய்நல்லூர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். பின்பு போலீசார்

ஜெயபாலின் பிரேதத்தை பிரேதவிசாரணை செய்தபோது உடனிருந்தேன். போலீசார் விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். இந்த வழக்கானது 2022 வருடத்திய வழக்கு என்று எடுத்துக்கூறியும் போதுமான வாய்ப்பு கொடுத்தும் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை.

**Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.**

Digitally signed by
SENTHILKUMAR
Date: 2026.07.27 16:07:27
+0530

**D.M-cum-JM,**

**T.V.Nallur.**